## (உ) பண நிரம்பல்

1962ம் ஆண்டு பணநிரம்பல் ரூபா 12890 இலட்சத்திலிருந்து ரூபா 540 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 13430 இலட்சமாக அமைந்தது. முந்தைய ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 800 இலட்சமாகும். சதவீதமாக நோக்கும் பொழுது இவ்வதிகரிப்புகள் 1962ம் ஆண்டில் 4.2 சதவீதமாகவும், 1961ம் ஆண்டில் 6.6 சதவீதமாகவும் உள்ளன. 1962ம் ஆண்டின் முதல் 5 மாதங்களிலும் பண நிரம்பலின் நடமாட்டங்கள் வழக்கமான தன்மையினும் பார்க்கச் சிறிது வேறுபட்டதாய் இருந்தன. அதன் காரணம், வர்த்தக வங்கி ஊழியர்களுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையில் ஏற்பட்ட தொழிற் தகராறு காரணமாக வங்கித் தொழில் தடைப்பட்டதே ஆகும். வர்த்தக வங்கித் தொழில் 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம் சாதாரணமாக இயங்கிக்கொண்டிருந்த பொழுது, பணநிரம்பல் ரூபா 12510 இலட்சமாக இருந்தது. மார்கழி மாதத்தில் அது ரூபா 12890 இலட்சமாக அதிகரித்து, பின் 1962ம் ஆண்டு பங்குனி மாதத்தில் அது தீட்சணமாக உயர்ந்து, ரூபா 16350 இலட்சமான உச்சநிலையை அடைந்தது. 1962ம் ஆண்டு சித்திரை மாதம்முதல் பணநிரம்பல் மிதமான அளவாற் குறைந்து சென்று 1962ம் ஆண்டு ஆனிமாதத்தில், அநேகமான வங்கிகளின் வங்கித் தொழிற்பாடுகள் சாதாரண நிலையை எய்திய பொழுது, ரூபா 12890 இலட்சத்தை அடைந்தது.

1962ம் ஆண்டின் முற்பகுதியிற் பணநிரம்பல் பெரும் அளவால் அதிகரித்தமை பெரும்பாலும் சாதாரணமான வங்கித் தொழிற்பாடுகள் தடைப்பட்டமையினாலேயே ஆகும். தொழிற்தகராறு நிலவிய அக்காலத்தில் வங்கித் தொழிற்பாடுகள் மிகக் குறுகிய வரையறுப்புகளுக்குள் நடாத்தப்பட்டு, பெரும்பாலும் காசோலைகளை மாற்றுவதற்கு மட்டும் இயங்கின. வாடிக்கைக்காரர்களின் கணக்குகளுக்குப் பணம் கட்டுதல், நிலையான கட்டளைகளின் பேரிற் கொடுப்பனவுகள், போன்ற சாதாரண வங்கித்தொழில்கள் ஒத்தி வைக்கப்பட்டன. மறுபக்கத்தில் முன்னரே தீர்ப்பனவு செய்யப்படாத காசோலைகளை வாடிக்கைக்காரர்கள் தத்தம் வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பித்துக்கொள்ள வங்கிகள் வசதியளித்தன. தொழிற் தகராறு நிலவிய காலத்திலும், அதன்பின் அநேக வாரங்கள்வரையும், வங்கித் தீர்ப்பனவு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. வங்கித் தீர்ப்பனவுகள் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த வேளையில், வாடிக்கைக்காரர்களின் கணக்குகளின் ஊடாகத் தீர்ப்பனவு செய்யப்படாத காசோலைகள் வாடிக்கைக்காரர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டமை, வங்கிகளில் உள்ள வைப்புக்களின் அளவை வீக்கமடையச் செய்தது. அன்றியும் நிலையான வாடிக்கைக்காரர்களுக்கு, முக்கியமாக, மேலதிக பற்றுகளை மேலும் நீடித்து வழங்கியமை பணநிரம்பல் அதிகரிப்பதற்கு ஓரளவு துணைக்காரணமாக இருந்தது. 1962ம் ஆண்டின் முதல் நாலு மாதங்களிலும் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, முழுவதும் புள்ளிவிபர அதிகரிப்பாகும்,

1962ம் ஆண்டு ஆடி மாதத்தின்பின் பணநிரம்பல் வீழ்ச்சியுற்றமை, வங்கிகளிடையேயுள்ள தீர்ப்பனவுத் தொழிற்பாடுகள் மறுபடிதொடங்கப்பட்டதையும், தனித்தனி வைப்புக் கணக்குகள் தத்தம் உண்மையான மட்டங்களை அடைந்ததையும் பிரதிபலிக்கின்றது. 1962ம் ஆண்டு ஆவணிமாத இறுதியில் பண நிரம்பல், 1961ம் ஆண்டு மார்கழி மாத இறுதியில் இருந்ததிலும் பார்க்க ஏறக்குறைய ரூபா 190 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது என்பது உணரத்தக்கது. எனினும் 1962ம் ஆண்டு ஆவணி மாத இறுதிக்குரிய தொகை, 1961ம் ஆண்டு ஆவணி மாத இறுதிக்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 390 இலட்சத்தால் உயர்ந்தாக இருந்தது என்பது, வர்த்தக வங்கிகளுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் இடையிற் தகராறு நிலவிய காலத்திற் பணநிரம்பல் அசாதாரணமாக அதிகரித்ததாயினும், 1962ம் ஆண்டில் உண்மையாகவே பணநிரம்பல் உயர்ந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கின்றது. 1962ம் ஆண்டின் இறுதி நாலு மாதங்களில் (கார்த்திகையைவிட) பணநிரம்பல் பொதுவாக உயர்ந்து செல்லும் தன்மையுடையதாக விளங்கியது. கார்த்திகை மாதத்திற் பணநிரம்பல் மிதமாக வீழ்ச்சியுற்றதெனினும், அவ்வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்து மார்கழி மாதத்திற் பணநிரம்பல் தீட்சணமாக அதிகரித்தது. புரட்டாதி மாதத்திற்கும், ஐப்பசி மாதத்திற்கும் இடையில் ரூபா 240 இலட்சத்தால் அதிகரித்துள்ள பண நிரம்பல், மார்கழி மாதத்தில் இன்னும் கூடிய தொகையாகிய ரூபா 360 இலட்சத்தால் அதிகரித்தது.

1962ம் ஆண்டின் முதல் நாலு மாதங்களில் வங்கித் தொழில் தடைப்பட்டிருந்த காலத்திற் பொதுமக்களின் கையிலுள்ள நாணயம் அதிகரித்தது. பணநிரம்பலில், தற்பொழுது ஒரு பெரும்பகுதியாக விளங்கும் நாணயம், 1961ம் ஆண்டின் இறுதிக்குரிய ரூபா 6922 இலட்சத்திலிருந்து 1962ம் ஆண்டில் என்றுமில்லாத உச்சநிலையாகிய ரூபா 7661 இலட்சத்தை, 1962ம் ஆண்டு மாசிமாதம் அடைந்தது. அதன்பின் பொதுமக்களின் கையிலுள்ள நாணயம் நிதானமாக வீழ்ச்சியடைந்தது. 1962ம் ஆண்டு இறுதியிற் பொதுமக்களிடமிருந்த மொத்த நாணயம் ரூபா 7126 இலட்சமாகும். இது 1961ம் ஆண்டு இறுதியில் உள்ள தொகையிலும் பார்க்க ரூபா 204 இலட்சம் கூடியதாகும். பண நிரம்பலில் நாணயங்களினதும், கேள்வி வைப்புகளினதும் பங்கை ஒப்பியல் நோக்கின், கடந்த ஐந்து வருட காலத்தில் நாணயங்களினது பங்கு அதிகரித்துக்கொண்டு வந்த தன்மை 1962ம் ஆண்டிற் சிறிது தடுத்து மாற்றப்பட்டது. இத்தன்மையைப் பற்றி 1961ம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையிலும் கூறப்பட்டது. நாணயங்களைப் பணநிரம்பலின் சதவீதமாக நோக்கும் பொழுது அது கடந்த வருடங்களின் தன்மையைப் போலவே 1962ம் ஆண்டில் 53.1 சதவீதமாக இருந்தமை, 1961ம் ஆண்டிற்குரிய 53.8 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. 1962ம் ஆண்டிற் பொதுமக்களிடமுள்ள கேள்விவைப்புக்கள், நாணயங்களிலும் பார்க்கக் கூடிய சதவீதத்தால் அதிகரித்துள்ளன. 1961ம் ஆண்டு மார்கழியில் ரூபா 5964 இலட்சமாக விளங்கிய கேள்விவைப்புக்கள், 1962ம் ஆண்டில் ரூபா 6300 இலட்சத்திற்கு அதிகரித்தன. இது ரூபா 336 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகும்.

## அட்டவணை II உ-1

### பண நிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | சதவீத மாற்றம் 1957ல் இருந்து 1958 | சதவீத மாற்றம் 1958ல் இருந்து 1959 | சதவீத மாற்றம் 1959ல் இருந்து 1960 | சதவீத மாற்றம் 1960ல் இருந்து 1961 | சதவீத மாற்றம் 1961ல் இருந்து 1962 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை .. | 1,131 | 1,014 | 1,050 | 1,180 | 1,207 | 1,426 | −10·3 | + 3·6 | +12·4 | + 2·3 | +18·1 |
| மாசி .. | 1,105 | 1,016 | 1,053 | 1,192 | 1,193 | 1,561 | − 8·1 | + 3·6 | +13·2 | + 0·1 | +30·8 |
| பங்குனி .. | 1,107 | 1,023 | 1,089 | 1,194 | 1,210 | 1,635 | − 7·6 | + 6·5 | + 9·6 | + 1·3 | +35·1 |
| சித்திரை .. | 1,082 | 1,032 | 1,084 | 1,165 | 1,306 | 1,448 | − 4·6 | + 5·0 | + 7·5 | +12·1 | +10·9 |
| வைகாசி .. | 1,061 | 1,000 | 1,096 | 1,163 | 1,219 | 1,317 | − 5·7 | + 9·6 | + 6·1 | + 4·8 | + 8·0 |
| ஆனி .. | 1,045 | 1,015 | 1,094 | 1,170 | 1,221 | 1,298 | − 2·9 | + 7·9 | + 6·9 | + 4·4 | + 6·3 |
| ஆடி .. | 1,056 | 1,023 | 1,094 | 1,150 | 1,223 | 1,277 | − 3·1 | + 6·9 | + 5·1 | + 6·3 | + 4·4 |
| ஆவணி .. | 1,024 | 1,022 | 1,095 | 1,161 | 1,231 | 1,270 | − 0·2 | + 7·1 | + 6·0 | + 6·0 | + 3·2 |
| புரட்டாதி .. | 1,046 | 1,072 | 1,128 | 1,181 | 1,261 | 1,294 | + 2·5 | + 5·2 | + 4·7 | + 6·8 | + 2·6 |
| ஐப்பசி .. | 1,052 | 1,085 | 1,153 | 1,212 | 1,248 | 1,317 | + 3·1 | + 6·3 | + 5·1 | + 3·0 | + 5·5 |
| கார்த்திகை .. | 1,049 | 1,070 | 1,170 | 1,219 | 1,251 | 1,307 | + 2·0 | + 9·3 | + 4·2 | + 2·6 | + 4·5 |
| மார்கழி .. | 1,040 | 1,077 | 1,178 | 1,209 | 1,289 | 1,343 | + 3·6 | + 9·4 | + 2·6 | + 6·6 | + 4·2 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

## அட்டவணை II உ-2

### பண நிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | பொதுமக்களிடம் உள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பண நிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பவின் சதவீதமாக | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1953 .. .. | 335·3 | 40·6 | 491·5 | 59·4 | 826·8 |
| 1954 .. .. | 341·8 | 35·7 | 615·3 | 64·3 | 957·1 |
| 1955 .. .. | 384·5 | 35·8 | 688·4 | 64·2 | 1072·9 |
| 1956 .. .. | 401·1 | 35·6 | 725·7 | 64·4 | 1126·8 |
| 1957 .. .. | 434·9 | 41·8 | 605·2 | 58·2 | 1040·1 |
| 1958 .. .. | 529·8 | 49·2 | 546·9 | 50·8 | 1076·8 |
| 1959 .. .. | 565·0 | 48·0 | 612·7 | 52·0 | 1177·7 |
| 1960 .. .. | 595·3 | 49·2 | 613·6 | 50·8 | 1208·9 |
| 1961 .. .. | 692·2 | 53·8 | 596·4 | 46·2 | 1288·6 |
| 1962 .. .. | 712·6 | 53·1 | 630·0 | 46·9 | 1342·7 (1) |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*(1) தற்காலிகமானவை.*

நாணய வெளியீட்டை இனங்களின்படி ஆராய்ந்து பார்க்குமிடத்து, இவ்வருடத்தில் ரூபா 10 இனத்தைச் சேர்ந்த தாள்களை விட ஏனைய சகல இனங்களும் அதிகரித்துள்ளன எனத் தோன்றுகின்றது. எனினும் ரூபா 100, ரூபா 50 ஆகிய இனங்களைச் சேர்ந்த நாணயத் தாள்கள்தான் ஏனைய இனங்களிலும் பார்க்க ஒரு கூடிய சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உயர்ந்த பெறுமான இனத்தாள்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை, பணத்தை வங்கிகளுக்கு வெளியே வைத்திருப்பதற்காக, அல்லது புதைப்பதற்காக, பொதுமக்களின் நாணயக்கேள்வி இவ்வருடம் குறிப்படும்படியாக அதிகரித்துள்ளது என்பதைத் தெரிவிக்கின்றது. 1960ம் ஆண்டு முடிவில் ரூபா 1484 இலட்சமாக விளங்கிய ரூபா 100, ரூபா 50 ஆகிய இனத்தாள்களின் தொகையை 1962ம் ஆண்டு மார்கழி மாத இறுதிக்குரிய தொகையுடன் ஒப்பிட்டு நோக்கின், கடந்த இரண்டு வருட காலத்தில் ரூபா 100 இனத் தாள்கள் 898 இலட்சம் ரூபாய்களாலும், ரூபா 50 இனத்தாள்கள் 384 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்துள்ளன எனத் தெரிகிறது. நாணயக் குத்திகளில் 50 சத இனத்தைச் சேர்ந்த நாணயக் குத்திகளின் தொகை பத்து இலட்ச ரூபாய்களால் அதிகரித்ததை விட, இவ்வருடம் நாணயக் குத்திகளின் வெளியீட்டிற் பொதுவாக எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

கடந்த ஐந்து வருட காலத்திற் பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணங்களைப் பின்வரும் அட்டவணை ஒப்பியல் அடிப்படையிற் சுருக்கித்தருகின்றது.

## அட்டவணை II உ-3

### பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1956 - 57 மார்கழி முடிவில் | | 1957 - 58 மார்கழி முடிவில் | | 1958 - 59 மார்கழி முடிவில் | | 1959 - 60 மார்கழி முடிவில் | | 1960 - 61 மார்கழி முடிவில் | | 1961 - 62 மார்கழி முடிவில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வங்கிகளின் வெளியூர்ச் சொத்துக்கள் (நிகர) .. | — | 209·2 | — | 82·2 | — | 195·0 | — | 170·2 | — | 78·6 | — | 91·1 |
| 2. வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் | | | | | | | | | | | | |
| (அ) தனிப்பட்டோர் துறைக்குக்கொடுகடன் .. | 55·3 | — | 53·4 | — | 9·7 | — | 31·5 | — | 12·5 | — | 42·2 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | — | 7·4 | — | 39·6 | 30·2 | — | 6·0 | — | 21·4 | — | 71·3 | — |
| 3. மகா வங்கியின் தொழிற்பாடுகள் | | | | | | | | | | | | |
| (அ) அரசாங்கத்துக்கு முற்பணங்கள் .. | 32·6 | — | 75·0 | — | 61·8 | — | 21·9 | — | 1·9 | — | 3·0 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | 42·2 | — | 100·6 | — | 191·0 | — | 224·3 | — | 140·8 | — | 175·9 | — |
| (இ) ஏனைய இருப்புச் சொத்துக்கள் (நிகர) .. | — | 10·3 | 24·5 | — | — | 27·9 | — | 19·3 | — | 9·1 | — | 18·6 |
| 4. வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் (நிகர) .. | — | 38·4 | — | 68·1 | — | 23·2 | — | 72·5 | — | 19·6 | — | 50·9 |
| 5. அரசாங்கப் பணமிச்சங்கள் .. | 49·3 | — | — | 36·4 | 64·0 | — | 8·0 | — | 9·4 | — | — | 76·1 |
| 6. சீராக்கங்கள் .. | — | 0·8 | 9·6 | — | — | 9·6 | 1·4 | — | 1·0 | — | — | 1·7 |
| மொத்த விரிவு அல்லது சுருக்கக் காரணிகள் .. | 179·4 | 266·1 | 263·1 | 226·3 | 356·7 | 255·7 | 293·1 | 262·0 | 187·0 | 107·3 | 292·4 | 238·4 |
| பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றம் .. | −86·7 | | +36·6 | | +101·0 | | +31·1 | | +79·8 | | +54·0 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

குறிப்பு: முன்பு பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுக்கும், இவ் எண்தொகைகளுக்கும் வேற்றுமை இருப்பின் அது திருத்தி அமைக்கப்பட்டதனுல் என்க.

1962ம் ஆண்டில் பணநிரம்பலை அதிகரிப்பதற்கு ஏதுவாயிருந்த காரணிகள், பொதுவாக முந்தைய ஆண்டிற்குரியனவற்றைப் போலவே இருந்தன. பண நிரம்பல் அதிகரிப்பதற்கு மிக முக்கியமான காரணம், மகாவங்கியின் உடமைகளாக இருந்த இறைசேரி உண்டியல்களும், அரசாங்கப் பிணைகளும்,

அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், அதிகரித்தமை ஆகும். அவை 1962ம் ஆண்டில் ரூபா 1759 இலட்சத்தால் அதிகரித்தன என்பது, 1961ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூபா 1408 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. ஏனைய விரிவுக்காரணிகளாவன, 1961ம் ஆண்டில் ரூபா 125 இலட்சத்தால் அதிகரித்த வர்த்தக வங்கிக் கொடுகடன்கள், 1962ம் ஆண்டில் ரூபா 422 இலட்சத்தால் அதிகரித்தமையும், 1961ம் ஆண்டில் ரூபா 214 இலட்சத்தால் அதிகரித்த வர்த்தக வங்கிகளின் உடமைகளான இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகியன 1962ம் ஆண்டில் ரூபா 713 இலட்சத்தால் அதிகரித்தமையுமாகும். 1962ம் ஆண்டு சகல விரிவுக் காரணிகளினதும் மொத்தப் பெறுபேறு 1961ம் ஆண்டிலும் பார்க்கக் கூடியதாக இருந்தது எனினும், அப் பணநிரம்பல் விரிவில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியை ஈடுசெய்யத்தக்க அளவிற் சுருக்கக்காரணிகளும் இருந்தன. பணநிரம்பலைச் சுருக்கும் தன்மையுடைய பிரதான காரணிகள் பின்வருமாறு—1961ம் ஆண்டில் 786 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சி யடைந்த வங்கிகளின் வெளியூர்ச் சொத்துக்கள் 1962ம் ஆண்டில் 911 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தன. 1961ம் ஆண்டு 196 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த தவணை, சேமிப்பு ஆகிய வைப்புகள் 1962ம் ஆண்டில் 509 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. முந்தைய ஆண்டில் 94 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்த அரசாங்கப் பண மிகுதிகள் 1962ம் ஆண்டில் 761 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மேலே கூறப் பட்ட விரிவுக் காரணிகளினதும், சுருக்கக்காரணிகளினதும் நிகர விளைவால் 1962ம் ஆண்டில் மொத்தப் பணநிரம்பல் ரூபா 540 இலட்சத்தால் அதிகரித்தது.

இதுவரை கூறப்பட்ட விபரங்களிலிருந்து அறியக்கிடப்பது யாதெனில், முந்தைய ஆண்டிற் சென்மதி நிலுவையே பண நிரம்பலின் முக்கிய சுருக்கக் காரணியாக அமைந்திருக்கையில், 1962ம் ஆண்டில் அதேயளவு முக்கிய மானவையாக அரசாங்கத்தின் பணமிகுதிகளின் அதிகரிப்பும், பொதுமக்க ளின் தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களின் அதிகரிப்பும் அமைந்துள்ளன. ஆனல் மறுபக்கத்தில் 1959ம், 1960ம் ஆண்டுகளில் ஏற்பட்டதுபோல் இலங்கையின் வெளியூர்ச் சொத்துக்கள், பிரமாண்டமான அளவாற் தொடர்ந் தும் வீழ்ச்சியுற்றிருப்பின் பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு மிகவும் சிறியதாகவே இருந்திருக்கும். 1959ம், 1960ம் ஆண்டுகளுக்குரிய போக்கின் வெளிப்படையிற் பணநிரம்பல் நிலைமை இரண்டு அம்சங்களைப் பிரதிபலிக் கின்றது. முதலாவதாக, பெரும்பாலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனுக இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துகளின் வீழ்ச்சி, ஒப்பியல்பாக நோக்கின், முந்தைய ஆண்டிலும் பார்க்கக் குறைந்த விகிதாச்சாரமானதாய் இருந்ததென்பதையும், இரண்டாவதாகப் பொதுமக்களும் அரசாங்கமும் தமது பணமிச்சங்களை அதிகரிக்க நோக்கும் போக்கையும் பிரதிபலிக்கின்றது.